இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 321 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 17 – செவ்வாய்க்கிழமை 01 ஜூலை 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 321: Thiruvalluvar Year - 2056 - Aani 17 - Tuesday 01 July 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## ‘திராவிட மாடல்’ ஆட்சியில், செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் மகத்தான சாதனை!

# இந்திய சுதந்திரத்திற்காகவும்- இனிய தமிழ் மொழிக்காகவும் தியாகங்கள் புரிந்த தீரர்கள் - அறிஞர்கள் - தலைவர்களைப் போற்றும் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு!

## கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 63 சிலைகள் – 11 மணி மண்டபங்கள் அமைத்து சாதனை! 28 சிலைகளும் 12 அரங்குகளும் அமைக்கப்படுகின்றன!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.02.2024 அன்று சென்னை, மெரினா கடற்கரையில் , பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடம் மற்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் திறப்பு நிகழ்ச்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து வைத்தார்.

**சென்னை, ஜூலை 1 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்திய சுதந்திரத்திற்காகவும், இனிய தமிழ் மொழிக்காகவும் தியாகங்கள் புரிந்த தீரர்கள், அறிஞர்கள், தலைவர்கள் அனைவரையும் போற்றி நான்கு ஆண்டுகளில் 63 சிலைகள், 11 மணி மண்டபங்கள் அரங்கங்கள் அமைத்தும் - 28 சிலைகளும் 12 அரங்கங்களும் அமைக்கும் பணிகளை மேற்கொண்டும் இந்திய நாட்டிற்கே வழிகாட்டுகிறார்கள் !**

2011-2021 ஆகிய 10 ஆண்டு கால முந்தைய ஆட்சியில் 25 தியாகிகளுக்கு மட்டுமே சிலைகள் அமைக்கப்பட்டன!

அது பற்றிய விபரம் வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பணிகளில் சிறந்த பணி பல்லாயிரக் கணக்கான தலைமுறைகளுக்கும் தனித்தோங்கி நிற்கும் பணி, தென்கோடி குமரி முனையில் அய்யன் திருவள்ளுவருக்கு உலகமே கண்டு வியக்கும் வண்ணம் 133 அடி உயரம், 7000 டன் எடை கொண்ட மாபெரும் கற்சிலையை 9 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவி, புத்தாயிரம் ஆண்டு தொடங்கிய 2000, ஜனவரி1 அன்று திறந்து வைத்த திருப்பணியாகும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அய்யன் திருவள்ளுவர்சிலை போல எண்ணற்ற சிலைகள் மற்றும் மணிமண்டபங்கள் நிறுவி தியாகிகளைப் போற்றியுள்ளார்கள்.

**பேரறிவுச் சிலை**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதைக் குறிக்கும் வகையில் வெள்ளி விழாவை 30.12.2024, 31.12.2024 ஆகிய இரண்டு நாள்கள் மாபெரும் கலை விழாவாகக் கொண்டாடினார்கள். அய்யன் திருவள்ளுவன் சிலையை, “பேரறிவுச் சிலை” எனப் போற்றி மகிழ்ந்தார்கள். அறிஞர் பெருமக்களின் எழுத்தாவணங்களைத் தொகுத்து வெள்ளி விழா மலர் ஒன்றையும் வெளியிட்டார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அய்யன் திருவள்ளுவரின் பேரறிவுச் சிலையையும் விவேகானந்தர் பாறையையும் இணைத்து ரூ. 37 கோடி செலவில் இந்தியாவிலேயே முதலாவதாகக் கடல் மீது கட்டப்பட்டுள்ள பிரம்மாண்டமான கண்ணாடி இழைப் பாலத்தை 30.12.2024 அன்று திறந்து வைத்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில், திராவிட மாடல் ஆட்சியைப் பார்முழுதும் பாராட்டும் வண்ணம் நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைய இந்தியத் திருநாட்டின் எழுச்சிக்கு விதையாக வித்தாக அமைந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகள். அன்னைத் தமிழ் மொழியைக் காத்திட ஆருயிர்கள் தந்து போராடிய அற்புதத் தியாகிகள் அனைவரையும் போற்றிப் பாராட்டும் பெருமைக்குரிய சின்னங்களாகச் சிலைகளையும், மணிமண்டபங்களையும் தமிழ்நாடு முழுவதிலும் ஏராளமாக ஏற்படுத்தி வருகிறார்கள். இவை அனைத்தும் எதிர்காலத் தலைமுறை இளைஞர்களுக்கு நல்வழி காட்டி உணர்வூட்டும் உயிரோவியங்களாகும். அவற்றுள் சில. . .

**உத்தமர் காந்தியடிகள் திருவுருவச் சிலை**

15.8.2022 அன்று எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலை !

**முத்தமிழறிஞர் கலைஞர் சிலை**

28.5.2022 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் ரூபாய் ஒரு கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவியுள்ள திருவுருவச் சிலை !

**அண்ணல் அம்பேத்கர் சிலை**

27.10.2022 அன்று சென்னை, அண்ணல் அம்பேத்கர் மணிமண்டப வளாகத்தில் நிறுவியுள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலை !

**நாவலர் நெடுஞ்செழியன் சிலை**

26.12.2021 அன்று நடமாடும் பல்கலைக் கழகம் எனப் போற்றப்பட்ட நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்கு சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை வளாகத்தில், மார்பளவு வெண்கலச் சிலை !

**பேராசிரியர் க.அன்பழகனார் சிலை**

10.8.2023 அன்று சென்னை நுங்க ம்பாக்கம் பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகத்தில் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களுக்கு 37 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்துள்ள திருவுருவச் சிலை ! டி.பி.ஐ வளாகத்திற்கு பேராசிரியர் அன்பழகனார் பள்ளி கல்வி வளாகம் என பெயர் சூட்டி நிறுவியுள்ள பேராசிரியர் அவர்களின் முழு உருவச் சிலை ! ஆகிய சிலைகள் அனைத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**கர்னல் ஜான் பென்னிகுயிக் சிலை**

தென் தமிழ்நாட்டு பாசனத்திற்கு உயிர் தந்த முல்லை பெரியாறு அணை கட்டிட தம் வாழ்வின் வளம் முழுவதையும் தியாகம் செய்த பொறியாளர் கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு நன்றி செலுத்தும் வண்ணம் இங்கிலாந்து நாட்டில் அவர் பிறந்த கேம்பெர்லி நகரில் அவருக்கு ரூ. 33,65,000 செலவில் மார்பளவுச் சிலை அமைத்து அதனை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்களை அனுப்பி 10.9.2022 அன்று திறந்து வைத்தார்கள் !

**கி.ராஜநாராயணன் நினைவரங்கம்**

2.12.2022 அன்று கரிசல் இலக்கியத்தை உலகறியச் செய்த பிதாமகர் கி.ரா.என்னும் கி.ராஜநாராயணன் அவர்களுக்கு கோவில்பட்டியில் ஒரு கோடியே 50 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் நினைவரங்கம்.

**வாரணாசியில் பாரதியார் நினைவு இல்லம்**

11.12.2022 அன்று உத்தரப்பிரதேச மாநிலம், காசியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த வீடு நினைவில்லமாக்கப்பட்டு அங்கு ரூபாய் 18,67,500 செலவில் பாரதியாரின் மார்பளவுச் சிலை!

**அல்லாள இளைய நாயகர் சிலை**

28.1.2023 அன்று நாமக்கல் ஜேடர்பாளையத்தில் ரூபாய் 26 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டில், அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு, குவிமாடத்துடன் (Dome) கூடிய திருவுருவச் சிலை

**பெருங்காம நல்லூர் தியாகிகள் நினைவு மண்டபம்**

14.2.2023 அன்று பெருங்காமநல்லூரில் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பிரமலைக்கள்ளர் சமூகத்தைச் சார்ந்த 16 தியாகி களைச் சிறப்பிக்கும் வகையில் 1 கோடியே 47 இலட்சம் செலவில் பெருங்காமநல்லூர் தியாகிகள் நினைவு மண்டபம்

**கிண்டி காந்திமண்டப வளாகத்தில் நிறுவப்பட்ட சிலைகள்**

14.2.2023 அன்று வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டிய சகோதரர்கள், வ.உ.சி,. ஆகியோருக்கு அமைக்கப்பட்டுள்ள சிலைகள்.

**செக்கிழுத்த செம்மல் வ.உ.சி, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சிலைகள்**

10.5.2023 அன்று கோவை வ.உ.சி. பூங்காவில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாருக்கு ரூபாய் 40 இலட்சம் செலவிலும், மயிலாடுதுறையில் பெண் சமூகச் சீர்திருத்த வாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையாருக்கு ரூபாய் 15 இலட்சத்து 97 ஆயிரத்து 669 செலவிலும்

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

## கீழடியில் – ‘தமிழ் மக்கள் நாகரிகத்தில் சிறந்தவர்களாக வாழ்ந்தார்கள்’ என்பது – அறிவியல் சான்றுகள் மூலம் நிரூபணம்!

# சங்க இலக்கியம், சொற்களால் வடித்த வாழ்வியலே ‘கீழடி’!

## ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ வெளியிட்ட ஆதாரப்பூர்வச் செய்திகளை வரவேற்று – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதப் பதிவு!

**சென்னை, ஜூலை 1 -**

**கீழடியில் கண்டெடுக்கப்பட்ட மண்டை ஓடுகளைக் கொண்டு வரையப்பட்ட தமிழர்களின் ஓவியம், 80 சதவிகிதம் அறிவியல் பூர்வமானது என்று பிரிட்டன் ஆய்வகம் அதிகாரப் பூர்வமாகத் தெரிவித்துள்ளது.**

**இதனையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சங்க இலக்கியம், சொற்களால் வடித்த வாழ்வியலே ‘கீழடி’ என்றும், கீழடியில் தமிழ்மக்கள் நாகரிகத்தில் சிறந்தவர்களாக வாழ்ந்தார்கள் என்பது அறிவியல் பூர்வமாக நிரூபணமாகியுள்ளது என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

அதன் விவரம் வருமாறு:-

கீழடி விவகாரத்தில் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணனின் அறிக்கையை வெளியிட ஒன்றிய அரசு மறுத்து வருகிறது. அதே வேளையில், கீழடி வரலாற்றை அழிக்க பாஜக முயற்சி செய்து வருவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குற்றம் சாட்டி இருந்தார்.

இந்த நிலையில், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், இங்கிலாந்தில் உள்ள லிவர்பூல் ஜான் மூர்ஸ் பல்கலைக் கழகத்தின் உதவியுடன், கொந்தகையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட இரண்டு மண்டை ஓடுகளை வைத்து நடத்திய ஆய்வின் அடிப்படையில் முகத்தை வடிவமைத்துள்ளனர்.

2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழர்களின் மண்டை ஓடுகள், கணினி உதவியுடன் முப்பரிமாணம் மூலம் அதன் முக அம்சங்களை புனரமைத்துள்ளனர்.

**மதுரை காமராசர் பல்கலை ஆய்வுக்கு பிரிட்டன் ஆய்வகம் சான்று!**

வெளியிடப்பட்டுள்ள தமிழர்களின் முகம் 80 சதவீதம் அறிவியல் பூர்வமானது என்றும், 20 சதவீதம் கலை அம்சம் கொண்டவை எனவும் பிரிட்டன் ஆய்வகம் தெரிவித்துள்ளது. இந்த கண்டுபிடிப்புகள் கீழடி மற்றும் கொந்தகை பகுதிகளில் சங்க கால மக்கள் எப்படி வாழ்ந்தனர், அவர்கள் எந்த சமூக மரபுகளுடன் தொடர்புடையவர்கள் என்பது போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் அமைந்துள்ளன.

குறிப்பாக, கீழடியில் வாழ்ந்த நபர்கள் தென் இந்திய மரபைச் சேர்ந்தவர்கள் என உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்கத்திய ஈரானிய வேட்டையாடிகள் மற்றும் ஆஸ்ட்ரோ ஆசிய இன மரபுகளின் பின்னணியும் மரபணுக்களில் இருப்பது தெரியவந்துள்ளது.

கொந்தகையில் இருந்து கிடைத்த எலும்புக்கூடுகளின் அடிப்படையில், அந்த காலத்திலே வாழ்ந்த ஆண்களின் சராசரி உயரம் 5 அடி 7 அங்குலமாகவும், பெண்களின் உயரம் 5 அடி 2 அங்குலமாகவும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

அக்காலத்தில் வாழ்ந்த நபர்களின் முகங்களை அறிவியல் முறையில் மீட்டெடுக்கும் பணி இந்தியாவில், குறிப்பாக தென்னிந்தியாவில் முதன் முறையாக கீழடியில் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு - மதுரை காமராசர் பல்கலைக் கழக ஆராய்ச்சி - அதில் காணப்படும் உண்மைகளுக்கு பிரிட்டன் ஆய்வகம் அளித்த சான்று ஆகியன குறித்து ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ ஆங்கில நாளிதழ் ஆதார பூர்வமாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!**

இந்நிலையில் பிரிட்டன் ஆய்வக ஆராய்ச்சியாளர்களின் ஆய்வு முடிவுகளைச் சுட்டிக்காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலை தளப்பதிவு வருமாறு:-

**கீழடியில் தமிழ் மக்கள் நாகரிகத்தில் சிறந்தவர்களாக வாழ்ந்தார்கள் என்பதற்கான அறிவியல் சான்றுகள் மூலம் நிரூபணமாகியுள்ளது. சங்க இலக்கியம் சொற்களால் வடித்த வாழ்வியல் எல்லாம் அறிவியல் வடிவில் நிறுவப்பட்ட சான்றாக கீழடியில் கிடைத்துள்ளது.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



REVEALED: FACES OF KEELADI MEN

*UK lab used 3D reconstruction on two skulls excavated from Kondagai, believed to be a 2,500-year-old burial site*

Ragu.Raman@timesofindia.com

Archaeological excavations and carbon dating point to one of the oldest civilizations thriving at Keeladi, 12km southeast of Madurai in Tamil Nadu, in 6th century BCE. Now, they've put faces to at least two men who walked this earth some 2,500 years ago.

South Indian with traces of ancestral West Eurasian (Iranian) hunter-gatherers and ancestral Austro-Asiatic people — that's how researchers at Madurai Kamaraj University describe the facial features reconstructed on two skulls with help from Liverpool John Moores University in the UK. The skulls were found at Kondagai, a burial site around 800m from the main excavation site. Further DNA studies are needed to pinpoint the ancestry based on genetics, they say.

"We used a computer-assisted 3D facial reconstruction system to rebuild the facial musculature and estimate facial features following anatomical and anthropometrical standards," said Professor Caroline Wilkinson, director of Face Lab, Liverpool John Moores University, UK. The lower halves of the faces were more guesstimate; reconstruction of the upper halves was more accurate. "As the lower jaws of the skulls were missing, we used orthodontic standards to estimate the shapes of the mandibles from cranial measurements and planes," said Prof Wilkinson.

Researchers used forensic guidelines for facial reconstruction created from the study of clinical images of living people. After obtaining CT scanned images of the skulls from Kondagai, they estimated the tissue depth at various points of the skulls following published data of modern south Indians.

TOI Exclusive

FIRST LOOK: These faces are predominantly south Indian with a touch of West Eurasian and Austro-Asiatic characteristics | ►P 2

►'80% science, 20% art', P 6

‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ வெளியிட்டுள்ள செய்தி!